DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| CC / STC. No | .. | .. | **CC. 46 /2025** | | |
| Deposition of Witness for | | | PW 1 (LW1) | | |
| | | | Prosecution | | |
| | | | Court | | |
| Name | : | **திரு. அறிவழகன்** | Taluk | : | ஆத்தூர் |
| Father/Husband Name | : | த.பெ. சுப்ராயன் | Calling | : | சுயதொழில் |
| Village | : | தென்னங்குடிபாளையம் | Age | : | 64 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **08.08.2026**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

**துவக்க நேரம் 06.18**

1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வியாபாரம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகள் கஞ்சா மற்றும் ஹான்ஸ் விற்பதாக மேற்படி எதிரிகள் மீது நான் போலிஸில் சொல்லியதாக அவர்கள் என் மீது தவறாக புரிந்து கொண்டு, அதனால் என்மீது பகையுணர்வு கொண்டு, கடந்த 08.06.2022 அன்று எதிரி செல்வகுமாரும், அவருடன் மாற்றுதிறனாளி ஒருவரும் ஒரு டாடா ஏசியில் வந்து என்னை விபத்துக்குள்ளாக்கினார்கள்.

2. மேற்படி விபத்து குறித்து எதிரிகளின் மீது நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன். அதனை வாபஸ் வாங்க சொல்லி, எதிரிகள் என் வீட்டின் கேட்டையும் உடைத்து விட்டார்கள். மேலும் எங்கள் கிராமத்தில் கடந்த 10.07.2023 அன்று பஞ்சாயத்து குடிநீர் பைப்பு உடைந்து தண்ணீர் வெளியேறி கொண்டிருந்தது, அது சம்மந்தமாக என் கிராமத்தை சேர்ந்த டேங்க் ஆப்ரேட்டர் என்பவரிடம் தகவல் கொடுத்தேன்.அப்போது, செல்வகுமார் என்பவர் பொலிரோ ஜீப்பில் என்மீது வாகனத்தை மோதுவது போல் ஓட்டி சென்றார். இந்நிலையில் அது குறித்து 11.07.2023 அன்று ஆத்தூர் ஊரக காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளர் திருமதி. லட்சுமி

என்பவரிடம் புகார் கொடுத்தேன். மேற்படி புகாருக்கு 12.07.2023 அன்று சி.எஸ்.ஆர் வழங்கப்பட்டது.

3. இந்நிலையில் 12.07.2023 அன்று மாலை 05.30 மணியளவில் மேற்சொன்ன புகார் குறித்த சி.எஸ். ஆர் வாங்கி கொண்டு நான் எனது வீட்டிற்கு அப்பம்மசமுத்திரம் வழியாக வந்து கொண்டிருந்தபோது, அங்கிருந்த மாருதி கார் கம்பெனி அருகே எதிரிகள் செல்வகுமார், ராஜீவ்காந்தி, சஞ்சீவ் காந்தி, சரவணன், மினி என்கிற ராதா கிருஷ்ணன் ஆகியோர்கள் இரும்பு கலாய் பைப் வைத்து கொண்டு, செல்வகுமார் என்பவர் ஒரு கத்தியால் எனது இடது காலில் குத்திவிட்டார், மினி என்கிற ராதா என்பவர் இரும்பு கலாய் பைப்பால் வாயில் அடித்தார். அதில் எனக்கு வாய் மற்றும் மூக்கில் இரத்தம் காயம் ஏற்பட்டது. சஞ்சீவ் காந்தி என்பவர் என்னை எட்டி உதைத்தார். மேற்கண்ட எதிரிகள் அனைவரும் அவர்களது முகத்தை கருப்பு துணியால் மூடிவிட்டனர். சரவணன் என்பவர் ஒரு செக்கு மட்டையால் என்னை அடித்தார். மேற்கண்ட சம்பவத்தால் நான் மயக்கமடைந்துவிட்டேன். பின்பு என்ன நடந்தது என்ற விவரம் தெரியவில்லை. அப்போது அருகில் ஆடு மேய்த்து கொண்டிருந்த செல்வராஜ் என்பவர் சம்பவத்தை தடுக்க முயற்சித்தபோது, அவர் மீதும் மேற்கண்ட எதிரிகள் காரை செவர்லட் வெள்ளை கலர் காரை ஏற்றுவதற்கு முயற்சித்தனர். அதன்பின்பு 108 ஆம்புலன்ஸ் மூலம் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். பின்பு சேலம் அரசு மருத்துவமனைக்கு போகும்படி சொன்னார்கள். சேலம் அரசு மருத்துவமனையில் என்னை பரிசோதித்த மருத்துவர்கள் என் வலது புற கண்ணின் நரம்பு துண்டாகி விட்டது என்று சொன்னார்கள். சம்பவத்தை பற்றி போலிசார் ஆத்தூர் அரசு மருத்துவமனை வந்து என்னை விசாரித்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** மேற்கண்ட சம்பவம் பற்றி போலிசாரிடம் சொன்னேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதிரிகள் கஞ்சா மற்றும் ஹான்ஸ் விற்பதை என்னுடைய போலிசார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரிகள் விபத்து ஏற்படுத்தி என்னை மிரட்டியதாக கொடுத்த புகாரை வாபஸ் வாங்க சொல்லி, குடும்பத்தாரை மிரட்டியது பற்றி இந்த வழக்கின் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால்

சொல்லவில்லை, போலிசார் விசாரிக்கவில்லை, அந்த புகாருக்கு தனியாக சி.எஸ்.ஆர் வைத்துள்ளேன்.

2. எதிரிகளுக்கும், எனக்கும் ஏற்கனவே ஒரு வருடத்திற்கு முன்பு முன்விரோதம் இருந்ததா என்றால் விபத்து சம்மந்தமாக இருந்தது. ஊரில் ஏதாவது நடந்தால் அதிகாரிகளிடம் புகார் மனு கொடுப்பது வழக்கம் என்றால் முறையான பிரச்சினைக்கு கொடுப்பேன்.

3. எதிரிகள் என்னை அடித்து, தாக்கியதாக சொல்லும் சமயத்தில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம். மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, மருத்துவர் அனுமதியில்லாமல் மருத்துவமனையில் இருந்து நான் வந்து விட்டேன் என்றால் இல்லை.

4. என்னை அடிக்க பயன்படுத்திய இரும்பு கம்பி, செக்கு மட்டை, கலாய் பைப் ஆகியவற்றை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைக்கவில்லை, மருத்துவமனையில் இருந்தேன்.

5. எதிரிகள் முகத்தில் துணி கட்டியிருந்ததை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. இயற்கை மருத்துவம் பார்ப்பேனா என்றால் இல்லை, மூலிகை செடிகளை வாங்கி, மருந்து கம்பெனிக்கு கொடுப்பேன்.

6. எதிரிகளுக்கும், எனக்கும் ஏற்கனவே முன்விரோதம் காரணமாக தொழில் ரீதியாக தொந்தரவு கொடுத்து, அதனால் எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 4ம்எதிரி மாற்று திறனாளியாக இருக்கும் நிலையில் என்னை காலால் எட்டி உதைத்தாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.எதிரிகள் யாரும் என்னை தாக்கவில்லை என்றாலும், இருசக்கரவாகனத்தில் சென்றபோது, வயது மூப்பு காரணமாக நிலைதடுமாறி கீழே விழுந்து விட்டு, எதிரிகள் தாக்கியதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை.

**மறுவிசாரணை**

1. மேற்படி சம்பவத்தில் ஏற்பட்ட காயத்தில் என்னுடைய கீழ் பகுதி பற்கள் உடைந்து விழுந்து விட்டது. வழக்கின் சம்பந்தப்பட்ட எதிரிகளை எனக்கு அடையாளம் தெரியும், அவர்கள் ஆஜர் எதிரிகள் 4 நபர்கள் ஆவார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1.இருசக்கரவாகனத்தில் சென்றபோது, வயது மூப்பு காரணமாக நிலைதடுமாறி கீழே விழுந்தனால்தான்,எனது பற்கள் விழுந்து விட்டது என்றாலும், எதிரிகள் தாக்கியதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை.உண்மையில் எதிரிகள் தாக்கியிருந்தால் மருத்துவமனையில் முறையாக சிகிச்சை பெற்று மருத்துவரின் கருத்துரையின் பேரில் வந்திருப்பேன் என்றாலும், அவ்வாறு இல்லாமல் நானாகவே மருத்துவமனையில் இருந்து வந்துவிட்டேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை**

**முடிவு நேரம் 07.03**

| Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct |
|---|
| N MOHANASUNDARAM Digitally signed by N MOHANASUNDARAM Date: 2026.08.08 16:33:07 +0530<br>Judicial Magistrate No.1,(FAC)<br>Attur. |

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| CC / STC. No | .. | .. | **CC. 46 /2025** | | | | |
| Deposition of Witness for | | | PW 2 (LW3) | | | | |
| | | | Prosecution | | | | |
| | | | Court | | | | |
| Name | : | **திரு. செல்வராஜ்** | | Taluk | : | ஆத்துார் | |
| Father Name | : | த.பெ. செட்கவுண்டர் | | Calling | : | சுயதொழில் | |
| Village | : | பனமரத்துபட்டி | | Age | : | 75 | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **08.08.2026**

எதிரிகள் ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

**துவக்க நேரம் 07.05**

1. நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து ஆடு, மாடுகள் மேய்கிறேன். சம்பவம் நடந்த தேதி தெரியாது. சுமார் 03 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் மாருதி கார் கம்பெனிக்கு துாரத்தில் நான் ஆடு மேய்த்து கொண்டிருந்தேன்.அப்போது சத்தம் கேட்டு நான் கார் கம்பெனி அருகே ஒடி வந்து ரோட்டில் வந்து பார்த்தேன்.

2. அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த அறிவழகன் என்பவர் அய்யயோ என்று கத்தினார். நான் வந்து பார்த்தபோது கார் கம்பெனிகாரர்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர்.

3. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி, குவிமுச பிரிவு 161(3)ன் கீழான வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்திருப்பதால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யவேண்டி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1. காயம்பட்டவரை எனக்கு தெரியுமா என்றால் ஏற்கனவே எனக்கு தெரிந்தவர் தான். போலிசார் விசாரணையில் எதிரிகள் அறிவழகனை தாக்கியதாகவும், அதை நான் நேரில் பார்த்ததாக சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்று பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்பட்டது**

**முடிவு நேரம் 07.15**

| |
|---|
| Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct |
| N MOHANASUNDARAM — Digitally signed by N MOHANASUNDARAM Date: 2026.08.08 16:33:17 +0530<br>Judicial Magistrate No.1,(FAC)<br>Attur. |